

# மது விலக்கு பிரச்சார பிரசுரம்

குடி குடியை கெடுக்கும்! மதுவை ஒழிப்போம்!
மதுவை தொடாதே...மரணத்தை தேடிக் கொள்ளாதே!

போதையிலிருந்து மீள்வோம்!
ஒழுக்கத்தைப் பேணிக் காப்போம்!

தவறுகள் நடப்பது போதையாலே...
குடி அழிவது தீய பாதையாலே!

உற்சாகத்திற்கு மதுவை நாடாதே!
உயிருக்கு ஆபத்தைத் தேடிக்கொள்ளாதே!

வருத்தத்தைப் போக்க மதுவல்ல தீர்வு!
துயரத்தைத் தீர்க்க தேடாதே போதையை!

நோயற்ற வாழ்விற்கு குடியை நாடாதே!
மதுவைக் குடித்து சாவை அடையாதே!

போதையில் செய்யும் காரியம் வீண்!
மதுவில்லா வாழ்வே இனிக்கும் தேன்!

---

மது, மனிதனை மறக்கடிக்க செய்துவிடுகிறது. அதன் பிடியில் இருக்கும்போது, உபயோகமான எதையும் மனிதனால் செய்யமுடிவதில்லை. மது அருந்துபவர்கள் தங்களையும், தங்களைச் சார்ந்தவர்களையும் மாய்த்துக் கொள்கிறார்கள். தன் நிலை மறந்து, அநாகரீகமாக நடந்துக் கொள்கிறார்கள்.

பாம்பு தீண்டினால் கூட நம் உடலுக்கும், உயிருக்கும்தான் அழிவு உண்டாகும். ஆனால், குடி என்னும் சாபக்கேடு நம் உள்ளே இருக்கும் ஆத்மாவையும் சேதப்படுத்திவிடும்.

மதுவை சிறிய அளவிலோ, அதையே ஒரு வழக்கமாகக் கொள்ளாமல் எப்போதாவது அருந்துவதோ பயன் அளிக்கக் கூடியது என்று ஒரு சிலர் தவறானக் கருத்தை பரப்பி வருகிறார்கள். நம்பவும் செய்கிறார்கள். இந்த வாதத்தில் எந்த ஒரு அர்த்தமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியே இந்தக் கூற்றை ஏற்றுக் கொண்டாலும், மது அருந்தும் பல லட்சக்கணக்கான மக்களை கட்டுக்குள் வைத்திருப்பது சாத்தியம் இல்லை. ஆகையால், மது விலக்கு என்பதை மானுடத்தின் ஒரு கடமையாக நாம் கருத வேண்டும்.

- மகாத்மா காந்தியடிகள்

---

இங்ஙனம்: BB Systems (CIT-GPNP)
தகவல் தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் காந்திய கோட்பாட்டு மையம்,
55/208, வ.உ.சி. நகர், தங்கமாபுரிபட்டிணம், மேட்டூர் அணை – 636 402